20.02.2026.
O.S.No. 101/2024

வா. சா. 1 வெறியன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது தெரியுமா என்றால் தெரியும். தாவாச்சொத்தை 16.06.2008ம் தேதி கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கிட்டத்தட்ட கிரையம் பெற்று 16 ஆண்டுகள் கழித்து கிரையப்பத்திரத்திற்கும் பட்டாவுக்கும் விஸ்தீரணம் குறைவாக இருப்பதாகச்சொல்லி வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 2022ல்தான் பிரச்சனை வந்தது. 2022ம் வருடத்தில் சொத்து சம்மந்தமாக கிரையப்பத்திரத்திற்கும் பட்டாவுக்கும் விஸ்தீரணம் குறைவாக இருப்பதாகச்சொல்லி 2022லேயே சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தேன். வருவாய்த்துறையில் நான் நடவடிக்கை எடுத்தேன் என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் தருமராஜ், தேவகி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது. அதன் பின்பு அந்த சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2022ல்தான் நாங்கள் புழங்கிகொண்டிருக்கும் இடம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகச் சொல்லி பிரச்சனை செய்தார்கள். பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் 5.4.1968ம் தேதி முத்து கவுண்டருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்து கவுண்டர் அனுபவித்து வந்து இறந்தபின்னர் குருவபோயன் என்பவருக்கு 02.06.1975ம் தேதி கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்திலும் சர்வே எண்.1053/1ல் கீழ்புறம் 1 ஏக்கர் 30 செண்ட்

என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குருவபோயனும் அவருடைய வாரிசுகளும் சேர்ந்து சின்னம்மாள் என்பவருக்கு 19.07.2003 ம் தேதி கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலும் சர்வே எண்.1053/1 ல் கீழ்புறம் 1 ஏக்கர் 30 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னர் மேற்படி சின்னம்மாளிடமிருந்து 16.06.2008 ம் தேதி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலும் சர்வே எண்.1053/1 ல் கீழ்புறம் 1 ஏக்கர் 30 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின்படி வருவாய்த்துறையினர் ஸ்தலத்தை பார்வையிட்டு அளந்து அத்துமால் செய்துகொடுக்கவேண்டுமென நான் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே பிரதிவாதிகளின் முந்தைய பாத்தியஸ்தர்களின் சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கிரையப்பத்திரத்திற்கும் பட்டாவிற்கும் விஸ்தீரணம் குறைவாக இருப்பதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பழைய சர்வே எண்.1053/1 ல் 2 ஏக்கர் 60 செண்டில் தற்போதைய புது சப்டிவிசன்படி சர்வே எண்.1053/1 ஏல் 1 ஏக்கர் 52 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலமும், 1 ம் பிரதிவாதி தருமராஜின் பாட்டியான சின்னம்மாள் என்ற எர்ரசிக்கம்மாளுக்கு பூர்வீகப்படியும் பாகப்படியும் பாத்தியப்பட்டு அவர்கள் பேரில் தனி பட்டா ஏற்பட்டு, 4.8.1979 ம் தேதிய கிரைய ஆவணத்தின்படி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்கண்ட சின்னம்மாள் என்ற எர்ரசிக்கம்மாள் என்பவர் அனுபவித்து வந்து தன் மகன் வழிபேரனான 1 ம் பிரதிவாதி தருமராஜுக்கு 29.10.1985 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் மூலம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் பின்பு மேற்படி சின்னம்மாள் என்ற எர்ரசிக்கம்மாள் இறந்தபின்னர் 16.07.2002 ம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகள் மொத்த சொத்துக்களையும் பாகப்பிரிவினை

செய்துகொண்டதன்படி அதில் கண்ட ஏ செடியூல் சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளுக்கும் பி செடியூல் சொத்துக்கள் 3ம் பிரதிவாதி சவடம்மாள் என்ற சவுடீஸ்வரிக்கும் பாகமாக ஒதுக்கி அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாகவிஸ்தி பத்திரத்தில் சர்வே எண்.1053/1 ஏ.ல் 1 ஏக்கர் 52 செண்டில் சீனிவாசன் கிரையம்பெற்ற 60.3/4 செண்ட் நிலமும், 3ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 33.1/4 செண்டும் ஆக மொத்தம் 94 செண்டுகள் நீங்கலாக பாக்கியுள்ள 58 செண்ட் நிலத்தை 4ம் பிரதிவாதிக்கு 1,2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்து சொத்தை மேற்படி தேதியிலேயே 4ம் பிரதிவாதி வசம் சுவாதீனம் ஒப்படைத்து விட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதுதான் தற்போது பிரச்சனைக்குரியதாகும். 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றபின்னர் வருவாய்த்துறையில் ஆவணங்களை சரிபார்த்து வாங்கினார் என்றால் நானும் ஆவணங்களை சரிபார்த்துத்தான் கிரையம் வாங்கினேன். 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றபின் வருவாய்த்துறையினருக்கு மனுக்கொடுத்து அத்துமால் பிரித்து பட்டா எண்.3815 பெற்று கிஸ்தி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்ற விவரம் தெரியும் என்றால் 2022ல் தான் இதுசம்மந்தமாக பிரச்சனை வந்தது. அதற்கு முன்னர் எந்த பிரச்சனையும் இல்லை. தாவா இடத்தில் பிரதிவாதிகள் கம்பி வேலி போட முற்பட்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.1053/1 ஏ.ல் 58 செண்டைப்பொறுத்து 4ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி கிரையம்பெற்ற 58 செண்டில் 30 செண்டை அவரது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு 29.11.2019ம் தேதி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்து 5ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி அச்சொத்தை 6ம் பிரதிவாதிக்கு 20.10.2022ம் தேதி கிரையம் செய்து

கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி 30 செண்ட் போக பாக்கி 28 செண்டை 15.06.2023ம் தேதி 5ம் பிரதிவாதி தீபா அவர்களுக்கு 4ம் பிரதிவாதி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த 28 செண்டை எரியோட்டைச் சேர்ந்த பழனிச்சாமிக்கு 24.10.2024ம் தேதி 5ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.1053/1பியில் கீழ்புறம் 1 ஏக்கர் 30 செண்டில் எவ்வளவு என்னுடைய அனுபவத்தில் இருக்கிறது என்றால் 1 ஏக்கர் 30 செண்டுமே என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது. மேற்படி கிரையப்பத்திரத்தை அடமானம் வைத்துத்தான் தமிழ்நாடு மெர்க்கண்டேல் வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற முந்தைய பாத்தியஸ்தர்களின் கிரைய ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளதோ அதைத்தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய கிரையப் பத்திரத்தின்படி அளவுகள் சரியாக உள்ளதா என வருவாய்த்துறையினரை வைத்து அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்த்தேன். அதன் பின்னர்தான் வங்கியில் லோன் வாங்கினேன். கிரைய ஆவணத்திற்கும், பட்டாவிற்கும் விஸ்தீரணம் வித்தியாசம் இருப்பதாக வருவாய்த்துறை மேலதிகாரிகளிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. பட்டாவில் விஸ்ீதரணம் குறைவாக இருந்தால் வருவாய்த்துறையினிரிடம்தான் நான் மேல்முறையீடு செய்யவேண்டும் என்றும் அதற்காக இந்நீதிமன்றத்தில் இவ்வாறான வழக்கை நான் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. அனைத்து விவரங்களையும் நான் தெரிந்துகொண்டு வேண்டுமென்றே 2 முதல் 5 பிரதிவாதிகளை அலைக்கழிப்பு செய்வதற்காக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள்

அடியாட்களை வைத்து கம்பி வேலி போட முயற்சி செய்த விவரத்திற்கு காவல் துறையில் புகார் செய்தேனா என்றால் ஊர் பெரியவர்களை வைத்து பேசினேன். 2022ல் எரியோடு தலைவராக இருந்த தனுஷ்கோடி, காளியப்பன், சரவணன், சுப்பையன் மற்றும் சிலரை வைத்து பேசினோம். மேற்படி விவரத்தை பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ததற்கு காவல்துறையில் புகார் செய்யவில்லை என்றால் நான் நீதிமன்றத்தை அனுகிவிட்டேன். என்னுடைய அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.20 17:53:52 +0530

Principal District Judge,
Dindigul.